ஃ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰௯	சுபானு—ஆனி	1943—ஜுன்	மலர் ௩



திரு. Rm. அழகப்ப செட்டியார் அவர்கள், M. A, BAR-AT-LAW.

பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

திரு. Rm. அழகப்பசெட்டியாரவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், கைத்தொழிற் கலை நாட்ட ஐந்து இலட்சத்து ஒரு ரூபா நன்கொடையளித்த வள்ளலாவர். இப்பெருங்கொடை நம் நாட்டிற்கு இன்றியமையாத தொழில் வளங்கூட்டும்

முதனிலை நற்பேரறமாகும். செட்டியாரவர்கள் தமிழ்த்தாயின் திருவருளால், எல்லா நலங்களும் இனிதின் எய்தி, நம் தாய் மொழிக்கும் தாய்நாட்டிற்கும் இன்னனைய பேரறங்கள் பல வற்றைச் செய்தருளி நீடுழி வாழ்வார்களாக.

இப் பெருங்கொடை குறித்து, அப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் (Vice-chancellor) அறிவிப்பது :— கொச்சி வளநாட் டினைச் சார்ந்த புதுக்காட்டிலுள்ள 'கொச்சி நெசவுச்சாலை' யின் தலைவர், திரு. Rm. அழகப்பச் செட்டியார் M. A., Bar-at-law அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் கைத்தொழிற் கல்வியை நாட்டி வளர்ப்பதற்காக, ஐந்து இலட்சத்து ஒருபா ஆகிய பெரு நன்கொடையினை மனமுவந்து அளித்த செய்தியை நான் மிக்க மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன். செட்டிநாட்டு மன்னர் இந்தப் பல்கலைக் கழகத்தினை நிறுவிய நாள் முதலாக அதற்கெய்திய நன்கொடைகளுள் இது மிக்கதோர் நன்கொடை யாகும். இந்த நன்கொடையாலாகும் கலை, மாணவர்கட்கும் நாட்டிற்கும் மிக்க பயன் தரத்தக்கதாய புதுத் தொழில் முறை களை உணர்த்துமாகலின், வழி வழியாகக் கற்கும் மாணவர்கள் பெருநலமடைவார்கள். இப் பெருங் கொடையாளரைப் பல் கலைக் கழகம் என்றும் பாராட்டும். இந்தக் கலை முதற்பொருள், " திரு. Rm. அழகப்பச் செட்டியார் கைத்தொழில் நிதி " யெனப் பெயர் பெறும்.

சங்கத்து ஆண்டுவிழா.

இச்சங்கத்து ௩௨-ஆம் ஆண்டுவிழா, சுபானு, ஆடி, ௧, ௨, (*1943*-சூலை, *17*, *18*) ஆம் நாட்களில் **திருவாளர் ஆசிரியர், அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்** தலைமையில், நிகழும்.

தமிழ்ப் புலவர்களாகிய திருவாளர்கள், வீ. குமாரவீரையர் அவர்கள் 'காவியச்சுவை' என்பது பற்றியும், **த. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் M.A., B.L., M.O.L.,** '**தமிழ் ஒலி**' என்பது பற்றியும், முதல் நாள் மாலையிலும், **ஏ. ஆர். முத்தையன் அவர்கள்** "**தலைக்கண் வைத்தகண்**" என்பது பற்றியும், **இளவழகனார் அவர்கள்** "**சங்கத்தமிழ்**" என்பது பற்றியும், **இராமசாமிக் கவுண்டர் அவர்கள் M.A., L.T.,** (சேலம் கல்லூரித் தலைவர்) "**திருக் குறளும் பரிமேலழகரும்**" என்பது பற்றியும், *18*௨ மாலையிலும் **விரிவுரைகள்** இயற்றுவார்கள்.

இரண்டாம் நாட்காலையில் சங்கப்பேரன்பர், **மகா மகோ பாத்தியாய, முதுபெரும்புலவர், பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டி யாரவர்கட்குப்** பாராட்டு நிகழும்.

தமிழ் அன்பர்கள் வந்தருள்வார்களாக.

புலவர் கல்லூரி

இச் சங்கத்தின் அங்கங்களுள் ஒன்றுகிய இக்கல்லூரி, சங்கத்தின் இளம்பருவம் முதலே தமிழவேள் முதலாய சங்க அன்பர்கள் உள்ளங்களிற்றேன்றி நாளடைவில் உரம் பெற்றெழுந்து சங்கத்து வெள்ளிவிழாவில்,(வெகுதானிய)தமிழுலகின் அருட் பெருங் குரவராகிய ஞானியாரடிகள் திருவருள் பெற்றெழுந்து நாளும் வளர்ந்து வருவது தமிழன்பர் பலரும் அறிவர்.

சித்திரபானு மார்கழி இதழிற் கண்டாங்கு, சங்கப் பேரன்பர்களாகிய தமிழ் ஆசிரியர்கள், தலைவரும் ஆசிரியர்களுமாகத் தொண்டு செய, புகுமுகம், (Entrance) புலவர் (வித்துவான்) க, உ, ஆம் வகுப்புக்களுடன் நிகழ்ந்துவரும் இக்கல்லூரி, இது காலை, புலவர் மூன்றும் வகுப்பும் கொண்டுள்ளது. அடுத்த ஆண்டில் நான்காம் வகுப்பும் கொண்டு நிறையும்.

இதன் சிறப்பு வளர்ச்சியைச் சுருங்கக் கூறின், இதன்கண் பயின்று, இவ்வாண்டில், புகுமுகவகுப்பின் தேர்விற்குச் சென்ற மாணவர் பதினெழுவரில் பதினைவர் தேர்ச்சியுற்றதும், 7. D. II. ஆம் வகுப்பின் தேர்ச்சிக்குச் சென்ற மாணவர் பதின்மரில் எண்மர் தேர்ச்சியுற்றதும் ஆகிய வெற்றியைக் கூறலே அமையும். இதன்கண் இதுபோது அறுபதின்மரின் மிக்கார் பயில்கின்றனர். இவர்களுள் முப்பதின்மர் உணவுதவி பெறும் மாணவர்கள்.

இக்கல்லூரியிற் பயிலும் மாணவர்கட்குள், எளிமையுற்று இன்றியமையாமை எய்திநிற்கும் மாணவர்கட்கெல்லாம் உணவு, உறையுள் முதலிய வசதிகள் செய்துதரல், சங்கத்தின் நோக்கமாகும். அங்ஙனமே, கல்லூரி ஆசிரியர்களைத் தக்காங்குப் போற்றல் வேண்டும் என்னும் கருத்தும் சங்கத்திற்குளதென்பது கூறல் வேண்டா. எனினும் மேற்கூறிய நோக்கங்கட்கெல்லாம் போதிய மூலப்பொருளாதல், வருவாயாதல் இதுபோது இன்மையின், சங்கம், ஓரளவு பொருண்முட்டுப்பாடுற்று வருகின்றது. எனினும் தமிழ்த்தாயின் திருவருளாலும், தமிழ்ப்பேரன்பர்களாகிய தமிழ்ச் செல்வர்களின் அரிய நன்கொடைகளாலும், சங்கம் இக்கல்லூரியினை எத்தகைய குறைபாடுமின்றி அரிது போற்றி வருகின்றது.

இவ்வாண்டில், முப்பதின்மருக்கு மேலாய மாணவர்கல்லூரியிற் சேர விண்ணப்பம் செய்துள்ளார்கள். ஒன்பதின்மர்க்கு உணவுதவியளிக்க ஆணையளிக்கப்பட்டது. இதுபோது புலவர் கல்லூரியிற் பயிலும் மாணவர்களுட் பெரும்பாலர் எளியராவர். போர் நிகழ்ச்சிக் காலமாகிய இந்நாளில் உணவுப் பொருள்

களின் ஏற்றங் குறித்து, மாணவர்கட்கு ஆம் செலவு மிக உயர்ந் துளது. இங்ஙனம் ஆண்டுதோறும் மாணவர் தொகையும் செலவும் மிக்கு வருவதனைச் சங்கப் பேரன்பர்கள் ஆகிய பெருந் திருவினரெல்லாம் திருவுளங் கொண்டு, தத்தமக்கு இயன்ற அளவு மாணவர்கட்கு உதவும் மாண்புயர் அறத்திற் பங்கு கொள்ள முன்வருவார்களாக.

இத் தஞ்சைவளநாட்டிலுள்ள பெருநிலக்கிழவர்களும், சைவத்திற்கும் தமிழ்மொழிக்கும் பற்பல அரிய சிறப்பு நிகழ்ச்சிகளைச் செய்துவரும் ஆதீன மாபெருந்தலைவர்களும் சிறிதளவு கடைக்கணித்தருளினும், இக்கல்லூரியின் தளர்ச்சி நீங்கி மிகு வளர்ச்சி எய்தி மிளிர்தல் ஒருதலையன்றோ!

இங்ஙனம் இக்கல்லூரியின் நலங்கருதி, பேருதவி செய்தருளிய பெருந்திருவாளர்கள் பேரறத்தினை ஏனையோரும் செய்து பெரும்புகழ் எய்துமாறு அவர்களைப் பெயரளவில் ஈண்டுக் குறிக்கின்றேம். நன்கொடை விளக்கம், சென்ற சித்திரபானுப் பொழிலில், கல்லூரி நன்கொடைகள் என்ற இடங்களில் உள்ளன.

1. பூண்டி பெருநிலக் கிழவர், திரு. வீரையாவாண்டையாரவர்கள் நன்கொடை (மாணவர் ஐவர்க்கு உரிய செலவு)

2. மதுரை, திரு. இ. மா. கோபாலகிருட்டினக்கோன் அவர்கள் நன்கொடை (மாணவர் இருவர்க்கு உரிய செலவு)

3. யாழ்ப்பாணம், பரமேசுவர கல்லூரியின் தலைவர், திரு நடேசபிள்ளையவர்கள், B. A., B. L., நன்கொடை (மாணவர் இருவர்க்கு உரிய செலவு)

4. மதுரை, மீனுட்சி ஆலயின் அமைச்சர், திருவாளர் கரு. முத்து. தியாகராசச் செட்டியார் அவர்கள் நன்கொடை.

5. உக்கடை பெருநிலக்கிழவர் தேவரவர்கள் நன்கொடை.

6. திருவாளர், இராவ் சாகிபு P. கோவிந்தராசபிள்ளையவர்கள் நன்கொடை. அவர்கள் மக்கள் தாம் சேர்த்துவைத்திருந்த உண்டித்தொகை.

7. பழநி ஆய்க்குடி சமீன்தார் இராவ் பகதூர் திரு J. T. ஓபாலகொண்ட நாயக்கர் ஐயன் அவர்கள் நன்கொடை.

8. கரந்தை வணிகர்கள் நன்கொடை.

நீதிநெறி விளக்கம் மூலமும் உரைவளமும்

தமிழ்நாட்டின் தவப் பெருவாழ்வாக விளங்கும் தருமபுர மாபெரும் சைவ நிலையத்தின் அருட்பேரடிகள், இதுகாலை, தமிழுலகில், சமயம், மொழிகட்குச் செய்துவரும் பேரருட் செயல்களில் ஒன்று, நம் தமிழ்த்தாய்க்குச் சிறந்த நூலணிகள் இயற்றுவித்தலாகும். அத்தகைய அணிகளுள் ஒன்று இன்று நமது கண்ணிற்குப் புத்தணியாகிக் காட்சிதரும் **நீதிநெறி விளக்கம் மூலமும் உரைவளமும்** என்னும் அரும் பேரணியாகும்.

நீதிநெறி விளக்கத்தின் சிறப்பினைப் புலவர்கள்வாயிலாக நாம் விரிய உணர்தல் வேண்டா, பள்ளியில் அந்நூலைப் பயிலும் இளைய வகுப்புக்கட்குச் சென்று, உங்கள் மனதைக் கவர்ந்த இனிய நூலொன்றை நீங்கள் தனித்தனியே எழுதுக என வினவி, விடையை நோக்கின், ஒருங்கே, 'நீதிநெறி விளக்கம்' என்றிருக்கக் காணலாம். இத்தகைய அரிய இனிய தமிழர் தம் செல்வத்தை, மலரவனும் ஒவ்வாத வண்டமிழ்க் குருமுனிவன் படைத்த மாயாப் புகழ்ச் செல்வத்தை, நமது அருட் பேரடிகள் ஆணை தாங்கி, அத்திருநிலையப் புலவர், திரு. காழி. சிவ. கண்ணுசாமிபிள்ளை B. A., அவர்கள் தம் அரிய உரை வளம் கூட்டி வெளியிட்டுள்ளார்கள்.

இதன்கண், சொன்முறை, சொற்பொருள், கருத்துரை, ஒப்புரை மேற்கோள், சொல், தொடர் ஆராய்ச்சிகள், இந் நூற்குப் பிறர் எழுதிய உரைக்குறிப்புக்கள், அறிஞர் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் எனப் பலவுங் கொண்டு உரை வளம் செல்லுகின்றது.

இவ்வெளியீட்டின் பெருமையினை ஆய்ந்து காண்பார், இது, தமிழ் ஆங்கிலப் புலமை சான்ற ஒருவர், அறிவாற் பெரியர் ஒருவர், தாம் மேற்கொள்ளும் எவ்வெளியீட்டினையும் இனிது முடித்துக்காட்டி, நூல் வெளியீட்டிற்கு உரியார் எம் நாட்டில் இது காலை இலர் என்னுது தோன்றி வருகின்றனர் எனத் தமிழ் மக்கட்கு மகிழ்ச்சி யளிப்பாருள் ஒருவர் வெளியிட்டதொன்றெனவும், முகவுரையிலுள்ள அவையடக்கத்திற் காணுமாறு, ஒன்றுக்கும் பற்றுத எவரோ ஒருவர், தமது சிற்றறிவு, சிறு முயற்சிகளைக் கொண்டு வெளியிட்டதன்றெனவும் இனிது உணர்வர்.

திருவாரூர் நான்மணிமாலை

குமரகுருபரர் திருவாய் மலர்ந்தருளிய அரிய நூல்களில் ஒன்ருகிய இதனையும், அத்தருமபுர ஆதின மாபெருந்தலைவர்களாகிய அருட்பெருங் குரவரே, சென்னை, திருவாளர், ரா. சண்முக சுந்தரஞ் செட்டியாரவர்களைக் கொண்டு உரைநடை எழுதுவித்து வெளியிட்டுள்ளார்கள். திரு. செட்டியார் அவர்கள் நூலின் பேரழகிற்கொத்ததோர் இனிய அழகிய உரைநடை எழுதிச் சேர்த்துள்ளார்கள். இவ் வுரைநடையால் இந்நூலின் உரை நுட்பங்கள் பலவற்றையும் மாணவர்கள் ஆசிரியர்கள் உதவியின்றி எளிதின் உணர்ந்து கோடலாகும். இத்தகைய அரிய வெளியீட்டினை தமிழுலகிற்கு அளித்துத் தமிழன்னைக்குச் சிறந்த அணியொன்று ஆக்கியளித்த அருட்பெருங் குரவர் பேரருளைத் தமிழுலகம் மிகமிகப் பாராட்டற்குரியது. திரு. செட்டியாரவர்கள் நம் தமிழன்னைக்குச் செய்த அரிய புலநெறித்தொண்டினை மிகவும் பாராட்டுகின்ருேம்.

அன்னை அருங்குறள்

கோனுப்பட்டுத் தமிழன்னை நிலையத்தார், நம் தமிழன்னைக்குச் செய்துவரும் இனிய தொண்டுகளில், இந்நூல் வெளியீடு ஒன்ருகும். இதனை இயற்றிய பேரறிஞர், திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை M. A. L. T., அவர்கள்.

இந்நூல், குறள்போன்ற ஈரடிகளால் ஆய நறிய சிறிய நூல். இது ‘முன்னைப் பெருமையாம் பெற்ருேங்க முத்தமிழ்நல், அன்னை தருக அருள்’—என்று தமிழ்த்தாய் வணக்கங்கொண்டு எழுந்து, அத்தாயினை இனிது வணங்கி, தமிழ் நாடு, தமிழ்த்தாய், தமிழ்நூல்கள் இவற்றின் பெருமைகளை விரித்துக்கூறி, அத்தாயின் துயர், துயில் நிலைகளையும் எடுத்துக்காட்டி, தமிழ்த்தாயின் பணிகளை வலியுறுத்தி, தமிழ்ப் பெண்டிரது சிறப்பினை அறிவுறுத்தி, தமிழின் வீற்றினை விளக்கி, தமிழ்த்தாயைத்துயிலெழ வேண்டி வாழ்த்தி மிளிர்கின்றது. நுண்ணிய கருத்துக்களைக் கொண்டது. ஈற்றில் குறிப்புரையுங் கொண்டுளது. இது தமிழுலகம் மகிழ்வுடன் சுவைக்கும் சிறுவிருந்தாகும்.

தமிழவேள் தமிழ்க் கழகம், மேலைச்சிவபுரி
“ தமிழவேள் நினைவுநாள் ”

இக்கழகச் சார்பாகத் தமிழவேள் இராவ்சாகிபு திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் நினைவுநாட் கூட்டம்

26—5—43 மாலை 5 மணி அளவில் கணேசர் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் பண்டித வித்துவான் திரு. எஸ். ஏ. மல்லிங்கசாமிச் செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் சன்மார்க்க சபை ஆசிரியர் திரு. பரமசிவம் பிள்ளை யவர்கள் "தமிழவேள் தகைமை" எனுந் தலைப்பில், கரந்தையை வளம்படுத்திக் கன்னித் தமிழை வளர்த்த பிள்ளையவர்கள் பிரிவு, தமிழன்பர்கட்குப் பெருத்த ஈடு செய்ய வியலாத இழப்பு என்றும், வானைநோக்கி நின்ற வண்டமிழ்ப் பயிர், தமிழவேள் முகிலிலாமையான் வாடிநிற்கின்றதென்றும், ஆகலின் அண்ணல்தம் தொண்டினை அவனியில் அவம்படாது அருந்தமிழராற்றிச் சிறப்பிக்கவேண்டும் என்றுங் கூறினர். வித்துவான் மாணவர் திரு. நா. கூத்தப்பன் அவர்கள் "மறை யோடியைந்த மன்னர்" எனும் பொருளில், வள்ளுவரது ஒள்ளிய குறளுக்கேற்ப யாண்டும் தமது வாழ்வினை நடாத்தினரென்றும், விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்வை உலகினரும் வியக்க என்றுஞ் சிறக்கச் செய்தனர் என்றும் உரைத்தனர். வித்துவான் மாணவர் கோம்பை திரு. தி. பொ. நாராயணசாமி பாரதி அவர்கள் "தமிழ்நாடும் தமிழவேளும்" எனும் பொருட்கண், தமிழவேளுக்குத் தமிழ் நாடு எத்துணைத் தூரம் நன்றி யாற்றக் கடமைப் பட்டுளதென்றும், உயிர் தமிழுக்கு என்று உரைத்தவொரு மொழியைவுவந்தேற்று ஒருதனி நிலையுடையுயர் தமிழுக் குழைத்துத் தமிழரை முன்னேற்றிய தலைவரை இறை யெனப் போற்றிக் கோடல் முறையுடைத்தாகும் என்றும் எடுத்து மொழிந்தனர்.

இறுதியாகத் தலைவரவர்கள், நேரிற்கண்ட உண்மைகளைக் கூறி, தம்மினுந் தகுதியான் மிகவுந் தாழ்ந்தாரையும் எவ்வளவு உயரிய சிறப்புச் செய்தனரென்றும், உலகிற்கே உழைப்பிற்கும் உண்மை அன்பிற்கும் எங்ஙன் வழிகோலினரென்றும், தமிழ் மக்களுந் தரணியும் தமிழவேளை என்றும் நினைவு கூர்வான் அவர்தம் அருங்கலை நியமத்தைப் போற்றிப் பொலியச் செய்ய வேண்டுமென்றுங் கூறி முடித்தனர்.

இறுதியாகச் செயலாளர் திரு. கரு. பழநியப்பன் அவர்கள் நன்றி நவில, நினைவுநாட் கூட்டம் இரவு 7 மணி அளவில் இனிது நிறைவேறியது.

கடந்தைத் தமிழ்ச் சங்கம், பெண்ணுகடம்

கோடைகாலத் தமிழ்த் தொண்டர் குழு

காலஞ்சென்ற வித்துவான் இ. சிவகுருநாதன் அவர்களால் நிறுவப்பெற்றுக் கடந்த எட்டு ஆண்டுகளாக மிகச்சிறப்புடன்

நடைபெற்றுவரும் இத் தமிழ்ச்சங்கம் சென்ற மூன்று ஆண்டுகளாகக் கோடை விடுமுறையில், புலவர்களையும் மாணவர்களையும் கொண்டு கிராமங்களிற் சென்று, தமிழின் சிறப்புக் குறித்தும் தெய்வத் திருநெறி குறித்தும் சொற்பொழிவுகளாற்றித் தொண்டு புரிந்து வருகிறது. இவ்வாண்டும் வித்துவான் பட்டம் பெற்ற ஐந்து புலவர்களையும் பத்து மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்டு 15—5—43 முதல் 26—5—43 முடிய பன்னிரண்டு கிராமங்களுக்குச் சென்று சொற்பொழிவுகளாற்றி வந்தது. கிராமங்கள் தோறும் உள்ள பெரியோர்கள், குழுவினரைச் சிறப்புடன் வரவேற்று வேண்டிய துணை புரிந்தனர். தமிழ்த் தொண்டுபுரியும் தமிழகத்தின் ஏனைய கழகங்களும் இம் முறையைப் பின்பற்றி நடத்தல் நலமாகும்.

புலவரைப் போற்றுதல்

('செட்டிநாடு' இதழிற்கண்ட அரியசெய்தி.)

பண்டைக்காலத்துப் புலவர்களை வள்ளல்களும் மன்னர்களும் பாராட்டிய வரலாறுகளை, இன்று நாட்டுக்கோட்டை நகரத்துப் பெருந்திருவாளர்களிடத்தும் செட்டிநாட்டு அரசர், சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களிடத்தும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். செந்தமிழ்க் கவிமணி, சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்களுக்குச் சென்ற வைகாசித் திங்கள் 6-ஆம் நாள், நாட்டுக்கோட்டை நகரத்தினர்களால், ஆத்தங்குடியில் ஒரு பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்துளது. அங்கு நிகழ்ந்ததோர் பேரவையில், கவிமணியைப் பாராட்டிச் செட்டிநாட்டரசரவர்கள், திரு. T. K சிதம்பரநாத முதலியாரவர்கள், திரு. பச்சப்பா சுப்பிரமணியம் அவர்கள், திரு. சொ. முருகப்பா அவர்கள் முதலியோர் சிறந்த விரிவுரை இயற்றியபின், செட்டிநாட்டரசர் அவர்கள் உயர்ந்த பொன்னுடையை கவிமணிக்குப் போர்த்தினார்கள். நகரத்தார் தங்கம் மிடைந்த வெள்ளித்தட்டில் கவிமணியின் சிறப்பினைப் பொறித்து அளித்தனர். பின்பு கவிமணியார் இனிமை ததும்பும் நன்றியுரை கூறி வாழ்த்தினார்கள். இச் சிறப்பு நிகழ்ச்சி, புலவர்களை ஈன்ற நம் தமிழ்த் தாய்க்கு மிக்க உவப்பினைத் தரும் செய்தியாகும். இங்ஙனம் புலவர்களைப் போற்ற முன்வந்த திருவாளர்கள், தமிழ்த்தாயின் திருவருளால் எல்லா நலனும் பெற்று நீடுவாழ்வார்களாக.

வள்ளுவர் குறளும், தமிழ் நூன்மரபும்

திருவாளர். S, சோமசுந்தரபாரதியார் அவர்கள், M. A., B. L., பசுமலை.

தமிழர் தம்மொழியிற் செய்யுட் செல்வம் பிறமொழி இலக்கியமெதற்கும் இளையாப் பெருமைத்தென்று பெருமிதங் கொள்வர். பலமொழிகளிலும் பழம்பெரும் பனுவல் வரிசையில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் ஒப்புயர்வற்ற மாட்சியுடையன என்று தருக்கி மகிழ்வர். அவர் தருக்கழிக்க அவாவுமொரு சிலர், வட நூல்வழியில் வந்தனவன்றித் தமிழில் தகவுடை நூல் இன்று என்பர். அதுபோதாமல், தொல்காப்பியரும் வள்ளுவர் குறளும் வட நூற் சார்பில் வடித்துத்திரட்டி ஆரியர் வழியினர் ஆக்கியளித்த பிச்சைகள் என்பர். தொல்காப்பியரே வட நூன் முடிபுக்கு இடமே கொடாமல் தனித் தமிழ் வழக்கே தழுவித் தந்நூல் இயற்றப் பெற்றதென்றியம்புகின்றனர். அதனால் ஓரளவு அவரை நெகிழவிடுவர். வள்ளுவர் குறளை இறுகப் பிடித்து ஆரியமயமாயமைந்ததென்றறைவர். அது (i) பழவழக்கில்லாப் பாயிரம் பெற்றுப் பயிலுதலாலும் (ii) தமிழ் நூன் முறையில் அகம் புறமென்னும் இரு பொருள் வகையிலியற்றப் பெறுமல் வட நூல் வழக்கால் அறமுதல் நாற்பொருள் முறையிற் பால்வகுத்தியங்குவதாலும், தமிழ்த்தனி நூலெனச் சாற்றெணு தென்பர். வள்ளுவர் சொல்லும் நல்லனவெல்லாம் வட நூல்களிலே வந்துள. அதனுல் அதுமுதனூலேயாகாதென்பர். இவருரை குறிக்கும் தவறும் தன்மையும் ஊன்றி நிறுத்து அதனுண்மை தேர்வது நடுநிலையுடையார் கடனுமாதலின், ஓரளவு அதனை ஆராய்ந்தறிவோம்.

(i) பாயிரப்பரிசு.

வள்ளுவர் நூலின் தொடக்கத்தில் முதல் நான்கியல்களைப் பாயிரமென்று தொகுத்தோர் கூறக்கேட்கின்றேம். பரிமேலழகரும் அவர்க்கு முந்திய மணக்குடவருமே இயல்வகை முறைகளில் இடையிடைத் தம்முள் வேறுபடினும், முதல் நான்கு ஓத்தைப் பாயிரமென்றே ஒத்துக்கூறுவர். அதனுல், உரைகாரர் காலந்தொட்டு இவ்வாறு குறளுக்குப் பாயிரம் கூறும் வழக்

குண்மை காண்கின்றோம். ஆனல், இளம்பூரணர்முதல் பழைய உரைகாரரும், அவர் எடுத்தாளும் சில சூத்திரங்களும் துலக்கும் பாயிர இலக்கணம், குறட்பாயிரத்தில் முற்றும் பொருந்தியமை யாமை கண்கூடு. ஐந்து பொதுவும், பதினெரு சிறப்புமாய பொருள்களைத் தொகுத்துரைப்பது பாயிரத்தியல்பு. வள்ளுவர் நூலில் இப்பதினறு பொருளும் தெளிக்கப்படாத நால்வே ரோத்துக்களைப் பாயிரமென்பது பொருளற்ற புதுமையன்றோ?

'பாயிரத்திலக்கணம் பகருங்காலை, நூனுதல் பொருளை
............நுவறல் வேண்டும்' எனும் இலக்கணத்தால்

நோக்கினும், வள்ளுவர் நூலின் முன்னியல் நான்கும் நூல்நுதல் பொருளெனல் நேரியதன்றே! இம்முரண்பாடு கண்டும், "பாயிரமில்லது பனுவலன்று" என்று கருதும் புலவர் பலரும் குறளின் நான்கு முதலோத்துக்களை நூன்முகமாக்கப் பல்லாற் றனும் படைத்துக்கூறி, ஒல்லாச் சொற்போர் ஓயாதிட நாம் காண்கின்றோம். பேருரையாளர் யாரும் இந்நாலியல் பாயிர மாதற்கு ஏயனகூறி இயைபுகாட்டிலர். இவ்விடர்களைய விரும் பிய சிலரும், கடவுள் வாழ்த்திற் கிடந்தரா உளத்தர் சிலரும், இந்நான்கியலும் வள்ளுவர் சொல்லா இடைச் செருகென்றே எடுத்தெறிந்து அமைதியெய்திவிடுகின்றார்.

இனி யொருசாரார், எல்லா நூற்கும் கடவுள் வணக்கம் நல்லதென்றியைந்து, மற்ற மூன்றியலும் கடவுள் கண்ணிய புறத்துறையாமெனப் புதுமுறை வகுப்பார். வான் சிறப்பியலை மின்னற்கொடிவிடு மேக வாழ்த்தாகும் "கொடி நிலை" என்றும், நீத்தார் பெருமை ஞாயிற்றை வாழ்த்தும் "கந்தழி" என்றும், அறன் வலியுறுத்தல் திங்களொடு சேரும் "வள்ளி" யாமென்றும், சொற்றிறம் காட்டிக் கற்பனைபடைப்பார். "கொடி நிலை, கந்தழி, வள்ளி" என்ற மூன்றும் வெட்சித்திணைத்துறைவகைகளுள் அடங்கும். வெட்சித்துறைகளுள் வருமிம் மூன்றும் "கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்பர் தொல்காப்பியர். முதலியலோடிவை மூன்றுங்கூட்டில், குறளறநூற்குக் கடவுள் வாழ்த்து, நால்வேறியலாய் நாற்பது பாட்டு வள்ளுவர் நவின்ற தாய்க் கொள்ளல் வேண்டும். அவ்வாருயின் இவற்றுள் எது வும் பாயிரமாகும் பான்மைத்தன்றும். பழந்தமிழ்ப் பனுவல்கள்

ஒன்றினும் இந்தச்சொற்கள் இப்பொருளிற் பயிலவுமில்லை. ஆதலாலிப்பொருள், வருந்திப் புகுத்தினும் பொருந்தாப்புதுமையாய் வியக்கலாமன்றிப் பயக்குமாறில்லை. அன்றியும், வள்ளுவர் காலத் தமிழ்ப்பாவலர்க்குத் தொல்காப்பியர் நூலொன்றே மேற்கோள். அதில், பாயிரப் பெயரும், இயல்வகை முறையும் சுட்டும் குறிப்பு யாதும் இல்லை. வள்ளுவர் பாயிரம் வகுக்க, முன்வழக்கும் மரபும் பண்டைப்பாக்களிலில்லை. அதனாலவர் குறள் நூற்குப் பாயிரம் நுவன்றனரென்பதை ஏற்குமாறில்லை. பாயிரமெனப்படும் குறட்பா நாற்பதும் வள்ளுவரியற்றுச்செருக லென்று தள்ளத்தக்க சான்றுமில்லை. சொன்னடை, நுண் பொருள் திட்ப ஒட்பங்களில் முதற்குறள் நாற்பதும் பின்வரும் பாக்களில் எதற்கு மிளையா எழில் வளம் வாய்ந்துள. அதனா லவற்றை எள்ளி விலக்கித் தள்ளுதல் கூடாது. வெண்குறள் யாவும் வள்ளுவர் தந்த ஒண்பாவென்றே கொள்ளல்வேண்டும். அதனால், பாயிரப் பெயர்தான் ஆய்தற்குரியதாய்த் தோன்று கின்றது. அதனை இனிச் சிறிது ஆழத்துருவி ஆராய்ந்துண்மை யறிய முயல்வோம்.

பாயிரப் பெயரும், வகைமுறையியலும், வள்ளுவர் காலத் தமிழ்ப் பெருநூலில் இல்லையாதலின், பாயிரம் எல்லாப்பனுவல் களுக்கும் வேண்டுமென்னும் விதியும் வழக்கும், விழுமிய பழைய சான்றோர் பாக்களைத் தொகுத்த காலத் தெழுந்தவா யெண்ணில் இழுக்காகாது. வடநூன் முடிபுகள் தமிழிற் புகுந்து இடம் பெறத் தொடங்கிய காலமும் அதுவே, ஆரிய அகத்தியர் பேரினைப் புதுக்கித் தமிழ்நூற்கு அவரைத் தனிமுதற்கடவு ளாக்குங்கதைகள் கோக்கப்பட்டன. வடவாரியர்கள் தென் பாலேற முதல் வழிகாட்டிய முனிவரின் தலைவர் அகத்தியரென் பதை வான்மீகராதி வடநூற் புலவர் வாழ்த்திப் போற்றுவர். தம்பெருந் தலைவரைத் தமிழ்நூற்றலைவராய்க் கொள்ளவைக்குங் கொற்றச் சூழ்ச்சியர் தமிழ்மொழிக்கு அவரைத்தலைவராக்கினர்.

"முந்துபல் நூற்றி யாண்டின் முன்னரே முடிந்து மாண்ட
அந்தணர் தலைவ னான அகத்தியன் றனையெழுப்பிச்
செந்தமிழ்ப் பொதியிற் சேர்த்துத் தேர்கிலாத் தமிழர் தம்மை
வந்தனை புரிய வைத்தோர் வன்மையார் அளக்க வல்லார்"

"தென்தமிழ்ச் சிவனைக் கொண்டு வடபனிக் கயிலை சேர்த்து
முன்புமுந் நூலைச் சார்த்தி முழுமறை ஓது வித்துப்
பின்பவன் தமராய்த் தம்மைப் பெருந்தமிழ் நாட்டு மக்கள்
அன்பொடும் வணங்க வைத்தார் ஆற்றலா ரளக்கற் பாலார்"

"அவனியிற் சிவனை யொப்பான் அகத்தியன் தமிழுக் காசான், அவனது பெயரினாலே அனைத்திலக் கணமும் செல்க" என்றொரு வானொலி எழுந்து வைதிகர் காதிற் சென்றது. அன்று முதல் தமிழ்ப்புலவர் அகத்தியருக் கடிமையானார்.

தொல்காப்பியர் தமது அரும் பெருநூலில், தமக்கு முன் தமிழில் பல்லோர் நல்ல நூல் பயின்றன என்றும், அவை துணை யாகக் கொண்டே தமது நூலியலுமென்றும், தெள்ளத்தெளியச் சொல்லுகின்றார். என்றாலும், அவரறியார் என அவர் நூற் குரையளப்போர் மறுப்பதோடு, அவர் நூலில் முன்னூலோர் பலரென்று குறிக்கும் பன்மைச்சொல்லெல்லாம் ஒருமையாய்த் திரித்துக்கொண்டு, புதியதமிழ்ப்பொதியமுனி பொய்க்கதையை மெய்யாக்க முயலுகின்றார்; இல்லாத அகத்தியர் நூல் இறந்த தென்றும், இறந்தொழிந்த அகத்தியனார் சொல்லாத இலக்கண மொன்றே தமிழில் முதனூலென்றும், சோராமற் சோபனங்கள் சொல்வாரானார். ஓயாதுரைக்கிற் பொய் மெய்யாய்விடும். அது போதாதெனில், பேருரைகாரர் கூறுங்கதைக்கு அவர்கூற்றே ஆகமச்சான்றாம். நல்லதமிழ்த்தொல்காப்பியரும், ஆன்றதமிழ்ச் சான்றோரின் அரும்பழைய தமிழ்ப்பாட்டும், அகத்தியர் முத னூலாக்கிய கதையைக் குறிப்பாற்கூடச் சுட்டவேயில்லை. வட மொழிக் கதைகள் வாய்மை உரைப்பவை; பழந்தமிழ் நூற்கள் சுட்டிலென்? சுட்டாக்காலென்? கயிலையிற் பயிலும் கடவுள் வடமொழியில் அகத்தியர் கதைகள் வழங்குகின்றன. சிவனார் கைலைப் பொறையால் நொய்தாய் எழுந்த புவனத்தென்தலை எளிமையை நீக்கிச் சமன்செயவந்த அகத்தியரிலக்கணம் இறக் கினும் இல்லையாயினும், தமிழ் முதல் நூல் அவர் தந்ததென்பது மறுக்கலாகா உரைமறையாகும். அகத்தியர் பேரால் வருவன அனைத்தும் தள்ளாதென்றும் கொள்ளல் வேண்டும். செய்தவர் பெயர்கள் தேராச் சூத்திரம்,உரைமறையாளர் தரின் அவையெல் லாம் இறந்த பேரகத்திய இலக்கணமாகும். 'பாயிரமில்லது பனுவலன்றே' என்றதை யியற்றியோர் பெயர் விளங்காமையால், அஃதகத்தியர் மதமே. அதற்கெதிராகத் தொல்காப்பியர் கோள் சொல்லவுந்தகாது. ஆதலாற் குறள் நூல் முதல் நான்கியலும் பாயிரமென்றே அகத்தியராணையாற் பகர்தற்பாற்றாம்.

"தொல்காப்பியம், திருவள்ளுவர், கோவையார், மூன்றினும்
.. ..இலையேல், வடமொழிவெளிபெற வழங்கும்"

என்னும் வைதிகச் சைவ வடமொழிப்புலவர், தமிழொருபாடை யென்றறையவே நாணுவர். அன்னோர்போல்வார் ஆரியர் மதத் தோடொவ்வா மரபுகள் ஒழித்தற்பாற்றென எள்ளியிகழ்வார்.

தமிழொரு தனிமொழியாகுமென்றும், அம்மொழி மரபுகள் பழந்தமிழ் நூல்களிற் பார்ப்பதே முறை என்றும் கருதுவோர், தொல்காப்பியர் தாம் தனித்தமிழ் வழக்கே தழுவி நூலெழுதுவ தாய்க் கூறுதலால், அவர் நூல்முடிபால் தமிழ்மரபாயத் துணி வார். தொல்காப்பியரோ பாயிரத்தியல்பும் பெயருமே கூறிலர். வள்ளுவர் குறட்பா தொல்காப்பியர் நூல்கொண்டியங்குவ தாய் உரைவகுத்தோரும் பிறதமிழ்ப் புலவரும் உடன்படுகின் ருர். அதுமெய்யாமேல், வள்ளுவர் தாமே பாயிரம் வகுக்கக் கருதவுமாட்டார். நாற்பது முதற்குறள் பாயிரவகையாம் பரிசும் பெற்றில. பனுவலெதற்கும் பாயிரம் வேண்டும் விதிகள் எழுந்ததும் வள்ளுவர் நூற்கு நெடும் பல்லாண்டு கடந்தபின் ஆகும். அதனுல், பழம் பெரும்புலவர் பாக்களைத் தொகுத் தோர்,,தமதிடைக்காலத்தெழுந்த புத்திலக்கண மதப்படி பாயிரம் வேண்டி ஆய்வதியல்பே. வள்ளுவர் நூலில் முதல் நான்கியல் கள் நூலொடு புணரா வேறு பெற்றியவாய் நிற்பதைக் கண் டார். அக்காலத்தில் படிப்பாரின்றித் தொல்காப்பியர் நூல் மறக்கப்பட்டு வழக்கிழந்திருந்ததாய்க் களவியலுரையே விளக் கக் காணுவம். தனிவகையாகி நூலின் முன்னிற்கும் நாற்பது குறளைப் புதுமதவிதியைப் போற்ற நினைப்போர் பாயிரமென்று பெயரிட்டிருத்தல் கூடுமன்றே.

ஆயினுமவைதாம் பாயிரத்தியலோடமையாமையினுல், வள் ளுவர் அவற்றை வகுத்த பரிசினைத் தொல்காப்பியர் நூல் கொண்டளந்துண்மை கண்டிட முயல்வது தவருகாது. நூனுதல் பொருளின் தன்மைக்கேற்பப் பாவகையமைதி பகருமுன்னே, செய்யுளியலில் சில பொதுமரபைத் தொல்காப்பியரே சுட்டக் காண்போம். எவ்வகைப் பாவால் எப்பொருள்பற்றிச் செய்யு ளியற்றினும், செய்யுள்கட்கெல்லாம் பொதுவாய், முன்னே, வாழ்த்தியல் நான்கினே அவர் வகுத்துக்கூறுவர். அவற்றை முறையே, (1) வழிபடுகடவுளை வாழ்த்தும் "புறநிலை," (2) வழிநணிபயக்கும் ஓம்படைக்கிளவியாம் "வாயுறைவாழ்த்து" (3) எல்லாமறிந்தார்க்கு வழிமொழியும் "அவையடக்கியல்," (4) "செவியறிவுறூஉ," என்ற பெயரோடெடுத்துக்காட்டுவர். இவ்வாழ்த்தியல் நான்கும் நூல்நுதல் பொருளால் பால் வேறு படாமல், எவ்வகைச் செய்யுட்கும் பொதுவாய் நிற்கும். இக் கருத்தை அவர் செய்யுளியலில் பொருட் பரிசாற் பாவகை முறை கள் விரிக்குமுன்னே "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே" எனும் நூற்பாவாற் கூறுவர். இதற்குப் பழைய உரைகாரர், முற்காலநூல்மரபோராமலும், நூற்பாவில் தெற் றெனத் தெளிக்கும் சொற்ருெடர்க்குறிப்பைத் தேராமலும், ஒல்லாப்பொருளைச் சொல்வாரானுர். வாழ்த்தியல் வகைகள்,

நாற்பாவாலும் கூறற்குரியன என்றிதற்குரைவகுத்தார். இதை அடுத்துவரும் இரண்டு சூத்திரங்களும் பாவகை நான்கில் வாழ்த்தியல்வகைகட்காவன இரண்டேயாமென விளக்கித் தெளிக்கின்றன.

(1) "..........புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா"
(தொல். செய். சூ. 106)

(2) "வாயுறை வாழ்த்தே, அவையடக் கியலே,
செவியறி வுறூஉஎன அவையு மன்ன"
(தொல். செய். சூ. 107)

இவற்றால், வாழ்த்தியல் வகை நான்கும், கலியும் வஞ்சியும் ஏற்காமல், அகவல், வெண்பா எனு மிருபாவே கொள்ளுமென்று தெள்ளத் தெளிப்பதாலும், "பாக்கும்" என்னுமல் "பாற்கும்" என்றதனாலும், உரைகாரர் கூற்றுத் தொல்காப்பியர் கருத்தொடு முரணுதல் கண்கூடு. இவ்வுரைகொண்டு, "பாக்கும்" என்று பாடம் திருத்தும் புலவரும் சிலருளர். எனவே, தமிழ்ச் செய்யுள்கட்கெல்லாம் வாழ்த்தியல் வகை நான்கனுள் ஒன்றும் பலவும் ஒப்பவுரிய' என்பதே தொல்காப்பியர் இங்குக் கூறக் கருதிய பொருளாமென்பது மலையிலக்காம். "புறநிலை" முதலிய வாழ்த்தியல் வகை நான்கும், எவ்வகைச் செய்யுட்கும் வாழ்த்தாயமையுமியல்புடைய என்று அவர் இங்கு விளக்குவதால், அக்காலத்தில் பொதுவாய்ச்செய்யுளெதற்கும் வாழ்த்துக் கூறும் வழக்குண்மையும், அவ்வாறு வாழ்த்தாம் பரிசு புறநிலை முதல் செவியுறை வரை நான்கினுக்கும் ஒத்துரியது என்பதும், இந்நூற்பாவால் தொல்காப்பியர் தெளிப்பது வெளிப்படை.

இனி, "நாற்பாற்கு முரித்தே" என்பதை வாழ்த்துவகை நான்கிற்கும் என்னுது, செய்யுள்வகை நான்கினுக்கும் வாழ்த்துக் கூறுதலுரித்தாகும் எனக்கொள்ளினும் அமையும். அறமுதலாகிய பொருள்வகை நான்கும் கூறும் செய்யுட் பரிசெதுவாயினும், வாழ்த்துக் கூறல் வழக்காறாகும். நாற்பொருளியலாற் பாற்படும் செய்யுள்வகையாதாயினும், வாழ்த்தொடுவருதலே மரபாமென்றும், அவ்வாறு செய்யுள் வாழ்த்தாய்க் கொள்ளற்குரிமை 'புறநிலை' முதலாம் நாலும் கொள்ளும் என்றும், இந்நூற்பாக் கருத்தாய்க் கொள்வதும் கூடும். இவ்விருபொருளில் எதனைக்கொள்ளினும், பனுவல்கட்கெல்லாம் வாழ்த்தியல் வகுப்பது பண்டைப்புலவர் கொண்டதோர் மரபென விளக்கமாகும். பொருள்வகை பற்றி வாழ்த்தியல் வகைபடல் வழக்காறில்லை;

நால்வகை வாழ்த்தும் எவ்வகைச் செய்யுட்கும் இயையுமென்பது தொல்காப்பியரால் தெளிக்கப்பட்டது. அதனுல் அப்பழமரபு வழுவாமுறையில் வள்ளுவர் நாலைவாழ்த்தியல் வகுத்தே அமைத்தாரென்பதும் போதருகிறது. குறளின் முதனுன்கியலும் பாயிரமாகாப் பான்மை முன் அறிந்தோம். இனி மேல்நோக்கி அந்நான்கியலும் வாழ்த்தியல் வகையாய் அமைவதும் காண்போம்.

(1) "புறநிலைவாழ்த்தை"க் கடவுள் வாழ்த்தென்றும், (2) எல்லார்க்கும் நனிபயக்கும் "வாயுறைவாழ்த்தை" வான் சிறப்பென்றும், (3) எல்லாமறிந்தார்க்கு வழிமொழியும் "அவையடக்கியலை" நீத்தார்பெருமை என்றும், (4) அறமறிவுறுத்தும் "செவியுறை"யை அறன்வலியுறுத்தலென்றும், வாழ்த்தியல் வகுக்கும் பழந்தமிழ்ச் செய்யுள் வழக்கு மறந்து, புதிய ஆரிய மதத்தால் பாயிரம் பாடப்பழகிய புலவர்தம் இருட்காலமருட்கையினுல் புதுப்பெயரிட்டு வழங்கலாயினர். (1) வழிபடுகடவுள் வாழ்த்தே "புறநிலை". (2) மழையினை வாழ்த்தல், வழிநனி பயக்கும் ஓம்படைகிளக்கும் வாயுறை வாழ்த்தாம். வாயுறை கிளக்கும் நூற்பாவில் அது வாழ்த்தாதலின் 'வேம்புங்கடுவும் போல வெஞ்சொற்ருங்குதலின்றி வழி நனிபயக்கும் ஓம்படை" என்று கூறப்பட்டது. வெஞ்சொல் விலக்கியதே வாழ்த்தாகும். இதில் தாங்குதல் எனபதற்குரிய செம்பொருள் பொறுத்தல் அல்லது சுமத்தல் என்பதாகும். அதற்கு மாருக, அடக்கல் அல்லது தடுத்தல் எனக் கூறுவர் உரைகாரர். தடுத்தல், தாங்கற் சொல்லின் நேர் பொருளன்று. பகைப்படை தாங்கினன் என்பதிலும், அப்படைத் தாக்கின் கொடுமையைப் பொறுத்தான் என்பதே செம்பொருள். பொறுத்தலின் வழியோ பயனே தடுத்தலாகலாம். சொற்பொருள் வேறு, பயன்வேறு. நிமித்தமும் பயனும் நேர்பொருளாகா. அன்றியும் வாழ்த்தலின் வேம்பும் கடுவும்போல வெஞ்சொல் ஆட்சி பொருந்தாது. வசவுக்குரிய வெஞ்சொல் வாழ்த்துக்கமையாது. இடித்தறங்கூறுவோர் வெஞ்சொற்கூறில், அதுவாழ்த்தியலன்று, இடித்துக்கூறலேயாம். தம்முரைக்கேற்ப உரைகாரர் கூறும் மேற்கோட் செய்யுளும் வாழ்த்தியலாகாமை வெளிப்படை. இனிவெஞ்சொல் வேண்டப்படின், "உண்ணின் றுடற்றும் பசி" "தானந்தவமிரண்டும் தங்கா", "வானேர்க்கும் சிறப்பொடு பூசனை செல்லாது" எனவருவன கொண்டமைதி கூறலும் கூடும். (3) இனி, அவையடக்கியல் விளக்கும் நூற்பாவின் ஈற்றடி முதற்ருெடர் "எல்லா மாந்தர்க்கும்" எனக்கொண்ட பாடம் பொருந்தாமை தேற்றம். கல்லாதார், கயவர், புல்லறிவாளர் எல்லோர் கூட்டமும் அவையாகாதே. 'மெய்ம்மையுற்ருர் சிலர், அல்லரேபலராதலின் "குற்றத்தினீங்கிக் கசடறக் கற்றுச் சொற்றெரிதல்

வல்லாராய்'' எல்லாமறிந்த அறிஞருக்கு வழிமொழிதலே அறனும் அவையடக்குமாகும்; அல்லாமல் பழிநாணுர் குழு வோடு எல்லா மாந்தர்க்கும் வழிமொழிதல், அவையடக்குக்கு மாருக கயவர்வழிபாடாய் முடியுமன்றே. அதனுல், "அவை யடக்கியலே..........எல்லாமறிந்தார்க்கு வழிமொழிந்தன்றே'' எனக்காட்டப்படும் பழைய பாடமே இயலியைபுடைத்து. இப் போது "நீத்தார் பெருமை'' என வழங்குமியல் முழுதும், எல்லாமறிந்தார்க்கு வழிமொழிதலாவதும் கண்கூடாம். இவ் வியலில் நீத்தாரைக்குறிக்கும் நினைவே வள்ளுவர் கொள்ள வில்லையென்று தோன்றுகிறது. துவரத் துறந்தவரே நீத்தா ராவர். இங்கு வள்ளுவர்க்கு, துறவிகளைச் சுட்டுங்கருத்தின்மை, இந்திரன் கதையாற் கரிபோக்குதல் காட்டும். அவனைச்சபித்த வர் பொறியடக்கித் தவமியற்றுங் கோதமர். அவர் துறவாமை யோடு, மனைவிபால் நிறைந்த அன்பும் வைத்தவர். அவர் சினத்தின் காரணமே, தம்மனைவியை இந்திரன் விரும்பியதாகும். இதனுல் இவ்வியல் ஆற்றல் மிகும் அறிஞரின் வாழ்த்தாமல் லால், நீத்தார் பெருமைகூற எழுந்ததன்று. வாழ்த்தியல் மறந்து பாயிரமாக்கியோரிட்ட புதுப்பெயரே "நீத்தார்பெருமை'' என்பதே அமையும். ஆதலால் இது "அவையடக்கியல்'' என் னும் வாழ்த்தியலாவது தெள்ளிவாகும். (4) இனி, அறன்வலி யுறுத்தல் என்னும் நான்காமியல், "செவுயறிவுறூஉ'' என்ற வாழ்த்தியல் வகையாதல், நடுநிலையாளர்முன் நெடுமலை நிலை போல நிற்கும். ஆகையால் தொல்காப்பியர் கூறும் வாழ்த்தியல் வகை நான்கும் வள்ளுவர் நூலிற் கொள்ளவைத்திருப்பது கண்டார் உவந்து கொண்டாடத் தக்கது.

இன்னுமோர் அழகும் இவ்வமைப்பில் காண்குதும். வாழ்த் தியல் நான்கும் குறையாது வந்த மாண்பொருவனப்பே. அதனோ டமையாது, தொல்காப்பியர் நூல் சொல்லிய முறையே வள்ளு வர் நூலிலும் வாழ்த்தியல் நான்கும் வரிசை பிறழாமல் வாய்ந்த பரிசும் ஆய்ந்து மகிழ்தற்காமழகன்றே? வழக்கொடு மரபு வழுவா நெறியில், வள்ளுவர் பொருணூல் வகுத்துளமாண்பு இங்குள்ளியுள்ளி உவத்தற்குரித்தே.

குறிஞ்சிப் பாட்டு

திரு. A. S. நாராயணசாமி நாயுடு அவர்கள், B.O.L.,
தலைமையாசிரியர், தமிழ்க் கல்லூரி, திருப்பதி.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௯, மலர் 2, பக்கம் 6)

‘முத்தினும் மணியினும் பொன்னினு மத்துணை, நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும், சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின், மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல், ஆசறு காட்சி ஐயர்க்கு மந்நிலை, எளிய வென்னார் தொன்மருங் கறிஞர்’ என்பது நன்றாக விளங்கிற்றிலது. முத்து மணி பொன் இவற்றானமைந்த கலங்கெடின் ஒன்று சேர்வதாகும் என்னும் இவ்வுவமை எவ்வாறு புகழ் நிறுத்தலெளியவென்னார் என்னும் பொருளை விளக்கு மென்பது நன்கு தெரிந்துகொள்ள வேண்டியுளது. சால்பு, வியப்பு, இயல்பு என்னும் இவை தாமும் இன்னவெனக் குறித்துக் கொள்ளல் அரிதாகின்றது. பெருமையும், பிறரால் வியக்கப்படு மருமையும், வழுவாத நல்லியல்பும் ஆகிய இவற்றினின்று வழுவின், அவ்வழுவினைக் களைந்து புகழ் நிறுத்தும் கழுவாய் செய்தல் ஐயர்க்கு மரிது என்று குற்றங்கட்குக் கழுவாய் கூறும் தொன்னூல்களை அறிந்தோர் கூறுவரென்று கொண்டு, இம் முச்சொல்லும் கற்புத்தன்மையின் பெருமை, அருமை, இயல்பைக் குறித்தனவாக அமைத்துக் கற்பொழுக்கங் குன்றின் அக்குன்றுதலுக்குக் கழுவாய் (பிராயச்சித்தம்) காண்டலரிது எனப் பொருள்படுத்தல் பொருந்துவதாமோ என ஆராய்ந்து காணல் வேண்டும். இப்பொருளுக்கு முற்கூறிய ‘கலங்கெடிற் புணரும்’ என்பது எவ்வாறு அமைவதாம் என்றுங் காணல்வேண்டும். கபிலர் ஆரியமரபுகள் பலவற்றை ஆங்காங்குக் கூறிச்செல்பவராதலின், ஈங்குப் ‘பிராயச்சித்தம்’ என்பதொன்றனையும் குறித்தாரோ என்னும் ஐயம் தோன்றுகின்றது.

‘களிறு...புறங் கொடுத்த பின்னர் நெடுவே, ளணங்குறு மகளிர் ஆடுகளங் கடுப்பத், திணிநிலைக் கடம்பின் திரளரை வளைஇய, துணையறை மாலையிற் கைபிணி விடேஎம், நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை, யடுங்கரை வாழையின் நடுங்க’ என்னுமடிகளில் ‘கைபிணி விடேஎம்’ என்பதனை விளக்க வந்த உவமை இன்னதென நன்கு விளங்கிற்றிலது; ஆய்தல் வேண்டும்.

இருவே மாய்ந்த மன்ற லிதுவென, அறிவுறுத்தலிற் பழியு முண்டோ என்ற தலைவி, 'ஆற்றின் வாரா ராயினும் ஆற்ற, ஏனையுல கத்தும் இயைவதால் நமக்கு' என்று கூறுவதாக உள்ளது. இங்ஙனம் அறத்தொடு நின்றபின், தலைவர்க்கே நம்மை அடை நேர்ந்திலராயினும், நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க, நமக்கு மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதாயிருந்தது' எனப்பொருள் கொண்டார் நச்சினார்க்கினியர். வாராராயினும் என்பதெவ்வாறு 'தலைவர்க்கே நம்மை அடைநேர்ந்திலராயின்' என்னும் பொருள்படும் என்று ஐயுறவுண்டாகிறது; தெளிவுபெற ஆய்தல் வேண்டும்.

'புரையோர் கடும்பொடு விருந்துண் டெச்சிய மிச்சில்' என்பதற்கு உரையாளரின் வேருக, மூவர் என்று யான் கொண்டமை சிறப்பதா என்பதை அறிஞர் எண்ணுவராக. உரையாளர் 'உயர்ந்த குலத்திற் பிறந்த உயர்ந்தோர் தமது சுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசிலை' என்றுரைத்தார். விருந்து என்பதனை உண்டியாகக் கொண்டுளாரிங்கு. 'உயர் குலத்திற் பிறந்த உயர்ந்தோரும், நம் கடும்பும், விருந்தினரும்' என்று கொண்டேன் யான். மேலும் 'வசையில் வான்றிசைப் பெரியோர்' என்பதற்குக் குற்றமற்ற வானுகிய இடத்திலுள்ள கடவுளர் எனக் கொண்டு, 'தென்புலத்தார் தெய்வம் விருந் தொக்கல் தானென்றாங், கைம்புலத்தா றோம்பல் தலை' என்னுங் குறளிற் குறித்த நடுவரான 'தெய்வம் விருந்தொக்கல்' என் போர், இங்குப் 'புரையோர் கடும் பொடு விருந்து' என்பதனுட் குறிக்கப்பட்டா ரென்றலும் பொருந்துமோ என்று காண்க.

V

இனிக் கபிலரது இப்பெருங் குறிஞ்சியிலிருந்து நாமறியும் தமிழ் நாட்டு வரலாறென்னெனக் காண்போம். அதன் முன் ஒன்று கூற விரும்புகிறேன். இலக்கியச்சுவை மலிந்த இப் பாடல்கள் அவ்விலக்கியச் சுவையின் மாட்சிக்காகவே பயிலப் படல் வேண்டும். அவற்றின் வரலாறு தெரிக்கும் பகுதிகளை நாம் பயன்படுத்திக் கொள்ளல் இன்றியமையாச் சிறப்பினதே யெனினும் அவற்றைக் கொண்டு இவற்றின் பெருமையறிதல் தகாதென உணரல்வேண்டும். இலக்கிய நயங் காணப்பயிலலே வாழ்க்கையின் பேரின்பமாகும்.

மகளிரும் மைந்தரும் பூக்களை விரும்பித் தலையிலும் மார் பிலும் காதிலும் அணிதலும், தழைதொடுத் திடையிலணிந்து கொள்ளலுமாகிய இவ்வழக்கங்கள் இன்றும் தமிழ் நாட்டு மலைவாணர் முதலிய பழந்தமிழ்க் குடிகளிடத்தே காணப்படு வனவே. இதனை இப்பாட்டுக் குறிக்கின்றது. முத்துமணி பொன் இவற்றால் அணிகலன்களிழைத்தனரென்றும் அறிவிக்கிறது.

நோய்தீரக் கடவுளரைப் பரவலை யறிகிறோம். அஃது இன்றும் உளதே. மணவினை நாடும் இருமுது குரவரும் பெரியோரும் குடிநிர லுடைமை, வண்ணம், துணைமை இவற்றை ஒப்பிட்டுப் பார்த்துக் கொடுப்பின் நன்குடைமையை யறிந்து ஒருவனையும் ஒருத்தியையும் வாழ்க்கையிற் பிணிப்பரென்பதை அறிகிறோம்.

அம்பெய்தலில் அக்காலத்தோர் மிகவுந் தேர்ந்தவர் என்பதும் அறியப்படும். தேறல் மாந்துதலும் சிறந்த அடிசிலை இல் வாழ்வான் உயர்ந்தோர், சுற்றம், விருந்து இவர்க்களித்து மிச்சில் மிசைதலும் அறியப்படுவன.

மறுபிறப்புண்டெனவும் ஒத்த காதலர் ஆண்டுங் கூடுவ ரெனவும் இப்பாட்டுக் குறிக்கின்றது. தான் சொல்வது வாய்மை என்பதை அறத்தைப் புணையாகக் காட்டியும் கடவுளை வாழ்த்தியும், வஞ்சினங் கூறியும், தெண்ணீர் குடித்தும் உறுதிப்படுத்திப் பிறரையுறுதபடி செய்யும் வழக்கம் அறியப்படுகின்றது. வேறு சில செய்திகளை முன்பு கூறியவற்றால் எளிதாக அறியலாம்.

மாறுபொரு தோட்டிய புகல்வினை யுடைய, வேறுபுலத் தாவைக் காணும் விடையைப் போல அணிபெற வந்து என்று, தலைவன் நாய்களை விரட்டிக் காம விருப்பொடு தலைவியை அணுகிய தன்மையைக் குறிப்பிடுகிறார். அவரால் நன்கு மதிக்கப்படவும், விரும்பப்படவும் குறித்த தலைவன் அணிபெறச் சென்றானும்; விடையைப் போல வெற்றிச் செருக்குத் தோன்றும் பீடு நடையோடு சென்றானும். பிறரால் நன்கு மதிக்கப்பட விரும்புவோர் தம் உடற்றூய்மை, அமைவு, உடைப்பொருத்தம், செய்கையமைவிவற்றைத் தாமறியாமலே தம்பாற் காணல் நாமறிந்ததேயன்றோ.

வேழமெதிர்தர உய்விடமறியாராகி நாணுமறந்து தலைவனை இவர் பொருந்தி நடுங்கினமையைச் 'சூருறுமஞ்ஞையின் நடுங்க' என்றுவமங் காட்டிக் கூறுகிறார். மஞ்ஞை அணங்காற் றீண்டப்பட்டு நடுங்குதலை நாங்கண்டறியே மாயினும், அணங்காற்றீண்டப்பட்டாராகக் கருதப்படும் மகளிர் நடுங்கும் நடுக்கத்தைக் கண்டறிந்திருக்கின்றோமாதலின், அதனை மனக்கண்ணாற் காணுதல் கூடும். மஞ்ஞை சூருற்றதென்று கூறலின் அமைதியை நாமறியோம்; அஃது ஒரு புலமை மரபு போலும்.

களிறு புறங்கொடுத்த பின்னர்க் கைபிணி விடாராகித் தலைவியும் தோழியும் கால்கள் நிற்க மறுக்க நடுங்குகின்ற நடுக்கத்தை, 'நுரையுடைக் கலுழி பாய்தலின் உரவுத்திரை, அடுங் கரை வாழையி னடுங்க' என்னும் சிறந்த உவமை விளக்குகிறது. இவை இப்பாட்டின்கண் உள்ள சிறந்த உவமைகளாம்.

இனி, இப்பாட்டினை ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தக் கபிலர் இயற்றினாரென இதன் உரைமுடிவிலுள்ள குறிப்புணர்த்தும். இவ்வாறுள்ள குறிப்புப் பலவும் உண்மையாவனவோ என ஐயுறின், பழம்பாடல்களின் ஆசிரியர்களிவரென நாமறிதல் என்றும் இயலாது. பலகாரணங்களால் அவை உண்மையாவன என்றே கொள்ளல் தகுவதாவதெனத் தோன்றுகிறது. எனின், இவ்வாரிய அரசன் பிரகத்தன் என்பான் யாவன்? அவற்கேன் கபிலர் தமிழறிவுறுத்தினார்? ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன் என்று வேறொரு பாடமும் உண்டென்றறிகிறோம். இவற்றுள் எது தக்கது? ஆரியவரசர் எவரேனும் இப்பெயருடையராயிருந்தனரா? அவருள் எவன் தமிழை அறிதற்கேற்கத் தமிழ் நாட்டின் பக்கலில் இருந்தவன்? கபிலர் ஏன் இப்பாட்டில் அவன் சிறப்பெதுவும் கூறிலர்? பிருகத்ரதன் என்று புலமை நிறைந்த ஓராரியவரசன் பண்டு ஆண்டுவந்தானென்பது, வடநூலும் பழங்காலவரலாறும் அறிந்த அறிஞரொருவரை அணுகி அறிந்தேன். வேறுசில ஆரிய அரசரும் அப்பெயரினர் உளர் என அறிகின்றேன். பிருகத்ரதன் என்பது பிருகத்தன்—பிரகத்தன் எனத் தமிழில் வழங்கப் பட்டிருக்கலாமன்றோ?

பிரமதத்தன் என்பானொருவன் சமயக் கொள்கைகளிலே 'பேதாபேதம்' என்பதனை உண்மையென்று காட்ட நூல்களோ நூலுரைகளோ யாத்தவனாக, வைணவப் பேராசானான இராமானுசருடைய ஆசிரியர்க்காசிரியரான ஆளவந்தாரும், வைணவ நெறியை வளர்த்த தேசிகன் என்னும் ஆசிரியரும் தம் நூல்களிற் குறித்துள்ளனர். அவன், அந்நூற் குறிப்புக்களால் கி. பி. ஆறாம் நூற்றாண்டு அல்லது சிறிது முன்பின் இருந்தானாகக் கொள்ளத்தக்கவனாகின்றான். ஆயின் அப்பிரமதத்தன் ஓரரசன் என்பது விளங்கவில்லை. தென்னாட்டாசிரியர்களால் அறியப்பட்டவன் என்பதே விளங்குகிறது.

பிரமதத்தன் என்னும் பேருள்ள அரசர் பலர் பெரும் புகழுடையராய்க் காசியிலும் வேறோரிடத்திலுமிருந்து ஆட்சி புரிந்தனரென்றும், அவர்களுட் புலமைநலஞ் சிறந்தா ரொருவரிருவர் கி. மு. ஐந்தாறாம் நூற்றாண்டுகளிலோ சிறிது முன் பின்னோ இருந்தனரென்றும் ஓரறிஞர் கூறுகிறார். தகுதி நிறைந்த ஆராய்ச்சியாளர்கள் இதனைப்பற்றி யாராயாது விட்டமை வருந்தத்தக்கதே. இனியேனும் புலமைத்தகுதியும் வாய்ப்பும் உடையார் இதனை யறிந்தாராய்ந்து சான்றுகள் காண முயல்வரென்று கருதுவோம். இவ்வரசன் இன்னானென்றும் இக்காலத்தினனென்றும் அறிவது, இப்புலவரும் இவராற் பாடப்பெற்ற பாரி முதலிய தமிழ்நாட்டுக் கொடையாளர் பலரும் இருந்தகாலத்தை யறிய ஒரு சிறந்த கருவியாகலாம்.

கபிலர் இப்பாட்டில் ' இகன் மீக்கடவும் இருபெரு வேந்தர், வினையிடை நின்ற சான்றோர் போல ' என்று தோழி செவிலிக்கும் தலைவியின் வருத்தத்துக்கும் அஞ்சிய அச்சத்துக்குவமையாகவும், ' முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற், பகைப்புறங் கண்ட பல்வேல் இளைஞரின் ' என்று—செருக்கித் துன்னுதொறும் வெகுள்வனவாய் நாய்கள் தெரிதலுக்கும், ' சினைஇய வேந்தன் செல்சமங்கடுப்ப ' என்று மாலை துன்னுதலுக்கும் உவமைகளுரைத்துள்ளார். இவற்றைக் கொண்டு இவ்வரசன் தமிழ் நாட்டரசனொருவனொடு எக்காரணத்தாலோ பகை காட்டிய காலைச், சான்றோர் இவர்க்கிடை நின்று சந்து செய்தனரென்றும், இவனும் தமிழரசனைப் போன்ற சிறப்புடைய பேரரசனென்றும், கபிலர் போர் செய்திருந்தால் ஒருவர் புலங்களை மற்றவரிளைஞர் அழித்திருப்பரென்றும் உலகையே அப்போர் இருள் மூட்டியிருக்குமென்றும் கூறிச் சந்துகொள்ள, இருவருமிசைந்த நற்றன்மையை இவனுக்கு விளக்கினரெனவும் நாம் குறித்துணர்தல் தகுவதோ என்பதையும் அறிஞர் ஆய்வாராக. ' வினையிடை நின்ற சான்றோர் போல ' என்று கூறியதால், தாமும் அவ்வாறு நின்றுருள் ஒருவர் என்னும் குறிப்பும் பெறப்படலாம்.

இச்சந்தின்பின் இவ்வாரியப் பேரரசன் தமிழ் மன்னனை நட்பினனாகப் பெற்றானென்றும், இவன் பழக்கத்தைப் பெற்ற கபிலர் இச் சீரிய அரசனுக்குத் தமிழ்நாட்டு மக்களின் இன்பவொழுக்க நன்னெறியைக் காட்டல் வேண்டியும், புலனெறிச் சிறப்பை யறிவிக்கவும் இப்பாட்டை ஆக்கினார் என்றும் அறிய இடமுண்டோ என்பதையும் ஆராயவேண்டும்.

இனிக்கபிலரது புலமையை அறிந்தளவிட முயல்வோம். இவர் இயற்கைப் பொருள்களை நன்கறிந்து சிறப்புறப் பாடல்களிலமைக்க வல்லரேனும், இவ்வன்மையினும் மக்களுள்ளத்தை உணர்த்தும் நுண்ணுணர்வின் வல்லமையே இப்பாட்டிற் பெரிதும் வெளிப்படுவதாம். உள்ளத்துணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டியும், அவ்வுணர்ச்சிகளாற்றுக்குண்ட மகளிரும் மைந்தரும் தம்முடல்நிலை தடுமாறுதலைக் காட்டியும் இவர் மகிழ்வித்த தன்மையை முன்னர்க் காட்டினேன். இப்பாட்டே உள்ளத்துணர்ச்சி பற்றி யெழுந்ததென்று சொல்லல் பொருந்துவதே. அன்றியும் இவர் பன்னூல்களையும் பல மரபுகளையும் அறிந்தவராதலின், மஞ்ஞை குருறல், கதிரவன் ஏழு குதிரைகளாலுய்க்கப் பெறல், பாம்பு மணியுமிழ்தல் முதலியன கவி மரபுகளையுங் காட்டிச்செல்வாராயினர்.

இனித் தோழி தானுந் தலைவியும் நீராடி மலர்களைப் பறித்ததாகக் கூறுபவள் ஒரு நூறு மலர்களின் பெயர்களையும் கூறினா

ளாகக் கூறுதலால், கபிலர் இப்பூக்களை யெல்லாம் நன்கறிந்தவ ரென்பதை நாமறிகிறோம். சிறந்த உவமைகளாக முற்காட்டிய வற்றால் இவர் இயற்கைப் பொருள்களை ஏற்புழிக் காட்டி இனிமை பெறத் தாங் குறித்ததை விளக்குவதோடு அவ்வுவமை களைக் கண்டே மகிழவும் செய்யும் திறத்தினரென்பதையும் நா மறியலாம். இவர் கூறிய மாலைக்காலத்தன்மை மிகவும் மகிழ்ச்சி தருவதொன்றாம். ஆன்கணம் கன்று பயிர் குரல மன்று நிறை புகுதரலும், அன்றில் பெண்ணை யகமடலகவலும், கோவலர் ஆம்பற்குழலால் விளிபயிற்றலும், ஆம்பலின் இதழ் கூம்பு விடுதலும், மகளிர் மனைக்கண் சுடர்தலைக் கொளுவலும், கானவர் பரணின் மேலே ஞெகிழி பொத்துதலும், வானம் மலை சூழ்தலும், விலங்குகள் கானத்திரட்டலும், புள்ளினஞ் சேக்கையடைந் தொலித்தலுமாகிய இம்மாலைக்கால இயல்புகளை மிகவுஞ் சிறப் புற இயல்பு தோன்றக் கூறியுள்ளார்.

மனமொருப்பட்டுக் கருத்தொத்த தலைவனும் தலைவியும் தம் முயற்சியாலன்றியே ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுக்களவி லொழுகினமை வழுவன்றென்பதையும், அது இறை கூட்டிய தென்பதையும் உணர்த்திய இப்புலவர் இப்பாட்டின்கண் இக் களவுதான் 'நாடறி நன்மணம்' அயர்ந்து கற்பாய் விரிதலையும், உயர்ந்தோரும், ஒக்கலும், விருந்தும் உண்டெஞ்சிய மிச்சிலைத் தலைவியொடுண்டலும் தகுவதென்று கொண்டு செய்யும் அக் கற்பு வாழ்க்கைச் சிறப்பும் உணர்த்திச் செல்லும் பெருமை அறிந்து மகிழத்தக்கதாம்.

இவர்தம் பிறபாடல்களை இப்பாடலோடொப்பிடல், பிற பாடல்களில் உள்ள ஒத்த கருத்துக்களைக் காட்டிடல் முதலிய வற்றை விரிப்பின் மிகப் பெருகும். இதனின்பத்தைப் பெற இதனை யறிதலே அமையும். இதன் இலக்கியப் பெருமை யளவு, இதனுற்பெறும் பிறவரலாறுகள், சொற்களின் ஆராய்ச்சி, இலக்கண அமைதி, உள்ளுறை யுவமம் முதலாய பலவும் இங்கு விரிவஞ்சி விடுக்கப் பெற்றன.

நன்கொடைகள்

ஏப்ரல், மே

புலவர் கல்லூரி

திரு. ஜினகுமார முதலியார் அவர்கள்	ரூ.	1—0—0
,, C. பெரியநாயகியம்மை அவர்கள் அண்ணாமலைநகர்		1—0—0
,, K. E. மதியாபரணம் அவர்கள் B A. Hon's	,,	1—0—0
,, பண்டித மு. அருணாசலம்பிள்ளை அவர்கள்	,,	1—0—0
,, ராம. அ. அ சிவ. சிவராமஞ்செட்டியார் அவர்கள், பாகனேரி		100—0—0
,, S. நடேசபிள்ளை அவர்கள், B. A., B. L., யாழ்ப்பாணம்		165—0—0
,, பழனிச்சாமிப்பிள்ளை அவர்கள், திருச்சி அறநிலையம் நன்கொடை ஒரு பகுதி		100—0—0
,, இராசம்மா அவர்கள், சிவாஜிநகர்		20—0—0
,, A. வீரய்யாவாண்டையார் அவர்கள், பூண்டி		100—0—0

சங்கம்

திரு. M. L. இராமசாமிபிள்ளை அவர்கள், மதுரை		2—0—0
,, பெரி. அள. மு. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள், பாகனேரி, ஆண்டுவிழாவுக்கு		50—0—0

ஏழை மாணவர் நிதி

திரு. இராவ்பகதூர். D. சதாசிவம் பிள்ளை அவர்கள் தஞ்சை, 35 மாணவர்க்குத் தந்த உண்டி உடைகளின் மதிப்பு		100—0—0
,, கள்ளப்பிரம்பூர் கிராமத்தார் நெல்கலம் $12\frac{1}{2}$		
,, M. முத்துக்குமாரசாமி அவர்கள், பங்களூர்		1—0—0
,, ப. தி. சோ. குமாரசாமி செட்டியார் அவர்கள் குடந்தை (தந்தையார் நினைவு)		25—0—0
,, ஆற்றூர் கிராமத்தார் நெல்கலம் 2-2/3		
,, ஆலங்குடி கிராமத்தார் நெல் கலம் $3\frac{1}{4}$		
,, தென்னங்குடி கிராமத்தார் நெல் கலம் 1-5/6		
,, கைலாய அறநிலைய நன்கொடை		40—0—0

தமிழவேள் நினைவு

திரு.	தி. இராதாகிருஷ்னநாயடு அவர்கள், தஞ்சை	10—0—0
,,	A. F. X. அதிசயநாதபிள்ளை அவர்கள், கரந்தை	1—0—0
,,	க. அண்ணுமலைபிள்ளை அவர்கள், தஞ்சை	5—0—0
,,	சிவ. முனிசாமிபிள்ளை அவர்கள், ஆலங்குடி	5—0—0
,,	அருணுசலம்பிள்ளை அவர்கள், ஆற்றூர்	2—0—0
,,	சிவ. கணபதிபிள்ளை அவர்கள், ஆலங்குடி	1—0—0
,,	உண்டியல் வரவு	5—7—3
,,	V. S. சிதம்பரம்பிள்ளை அவர்கள், கரந்தை	2—0—0
,,	கண. மு. சாத்தப்பசெட்டியார் அவர்கள், பாகனேரி	10—0—0
,,	கோ. ஆளவந்தார் நாயடு அவர்கள் பள்ளியகரம்	1—0—0
,,	வை. இராம. ஆ. சித. நாகப்பச்செட்டியார் அவர்கள், கண்டனூர்	25—0—0
,,	அன்பு, நாச்சியப்பசெட்டியார் அவர்கள், கண்டனூர்	5—0—0
,,	தெ. அரு. சித. அரு. குப்பாஞ்செட்டியார் அவர்கள், கண்டனூர்	15—0—0
,,	வீ. த. வீரப்பச்செட்டியார் அவர்கள், கண்டனூர்	10—0—0
,,	ராவ்சாகிப் ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள், தஞ்சை	10—0—0
,,	வை. வ. இலக்குமணஞ் செட்டியார் அவர்கள், வை. வ வடுகநாதஞ்செட்டியார் அவர்கள், அலர்மேல் பெண்கள் பாடசாலை, வலம்புரி	30—0—0
,,	மா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், தலைமையாசிரியர், வலம்புரி	1—0—0
,,	காசிச் செட்டியார் என்கிற இராமநாதன் செட்டியார் அவர்கள், கண்டனூர்	5—0—0
,,	தி. பொ. நாராயணசாமி நாயடு அவர்கள், கோம்பை	1—1—0